சிந்துவெளி வரிவடிவங்களும் தமிழ்நாட்டுக் குறியீடுகளும்

ஒரு வடிவவியல் ஆய்வு

கா.ராஜன்

இரா.சிவானந்தம்

மொகஞ்சதாரோ_0285_a

கொடுமணல்_G-1305

தமிழ்நாடு அரசு

தொல்லியல் துறை

அரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படும் சிந்துவெளி நாகரிகம், இந்திய துணைக்கண்டத்தில், அதன் சமகால எகிப்திய மற்றும் மெசபடோமிய நாகரிகங்களின் ஒருங்கிணைந்த நிலப்பகுதிகளைவிட அதிகமான நிலப்பகுதிகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. அரப்பா, மொகஞ்சதாரோ, தோலாவிரா, லோத்தல், காலிபங்கன், ராக்கிகடி போன்ற முக்கிய நகரங்களிலும் பல ஊர்ப் பகுதிகளிலும் நடத்தப்பட்ட அகழாய்வுகள் இந்த நாகரிகத்தின் பல்வேறு கூறுகளை அறிந்துகொள்ள தேவையான சான்றுகளை வழங்கின. தொல்லியல் சான்றுகளின் அடிப்படையிலும் அறிவியல் சார்ந்த காலக்கணக்கீடுகளின் அடிப்படையிலும் சிந்துவெளி நாகரிகத்தின் பண்பாட்டுக் கூறுகள் முந்தைய அரப்பன் காலம் (கி.மு. 3500-3000), தொடக்ககால அரப்பன் காலம் (கி.மு. 3000-2500), முதிர்நிலை அரப்பன் காலம் (கி.மு. 2500-1900) மற்றும் பிந்தைய அரப்பன் காலம் (கி.மு. 1900-1300) எனக் காலவரையறை செய்யப்பட்டுள்ளன.

சிந்துவெளியில் காணப்படும் வரிவடிவங்களின் பயன்பாடு, முத்திரைகள், மேம்பட்ட உலோகம், சிறந்த கலைநயத்துடன் கூடிய மட்பாண்டங்கள், நன்கு திட்டமிடப்பட்டுப் பல சதுரங்களாக உருவாக்கப்பட்ட வீட்டுமனைகள், வீடுகள், கோட்டைச் சுவற்றுடன் பாதுகாக்கப்பட்ட நகர அமைப்புகள், உள் குளியலறைகள் மற்றும் முற்றங்கள் கொண்ட பல அடுக்குமாடி வீடுகள், சுகாதாரத்தை வெளிப்படுத்தும் நிலத்தடி வடிகால்கள், பொதுக் குளியல் கட்டுமானம், தானியக் களஞ்சியம், கப்பல் துறை, தரப்படுத்தப்பட்ட எடைக்கற்கள், உள் மற்றும் வெளி வணிகத்தின் மூலம் பெற்ற வளங்கள், பன்முகப்படுத்தப்பட்ட விவசாய நடவடிக்கைகள், கால்நடை வளர்ப்பு, படகு கட்டும் தொழில்நுட்பம் போன்றவை அனைத்தும் நன்கு கட்டமைக்கப்பட்ட வளர்ச்சி பெற்ற நாகரிகத்தை எடுத்துரைக்கின்றன. இன்றுவரை, சிந்துவெளியில் கிடைக்கப்பெற்ற அழியாப் பொருள் சார்ந்த தொல்லியல் சான்றுகளின் அடிப்படையிலேயே அதன் பண்பாட்டுக் கூறுகள் மீள் உருவாக்கம்

மொகஞ்சதாரோ_632_A

கொடுமணல்_G-0780

தமிழ்நாட்டில் குறியீடுகள் கிடைக்கப்பெற்றுள்ள தளங்கள்

செய்யப்பட்டுள்ளன. சமகால நாகரிகங்களில் காணப்படும் வரிவடிவங்கள் படித்தறியப்பட்டதால் அச்சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளை அறிந்து கொண்டதுபோல் சிந்துவெளி எழுத்துகளைப் படித்தறிந்துகொள்ள முடியாததால் சிந்துவெளிப் பண்பாட்டின் முழுத்தன்மையை அறிஞர்களால் புரிந்துகொள்ள இயலவில்லை.

சிந்துவெளி எழுத்து

சிந்துவெளி முத்திரைகள் (seals), முத்திரையின் எதிர்ப்பதங்கள் (sealings), கழுத்தணிகள், மட்பாண்டங்கள் மற்றும் உலோகப் பொருட்கள் உள்ளிட்ட பல தொல்பொருட்களில் காணப்படும் வரிவடிவங்கள் மூலம் சிந்துவெளி மக்கள் நன்கு வளர்ச்சி பெற்ற எழுத்துமுறையைப் பெற்றிருந்தனர் என்பது தெளிவாக தெரிகிறது. இத்தகைய வரிவடிவங்கள் சார்ந்து இதுவரை ஏறக்குறைய 4000 சான்றுகள் கிடைத்துள்ளன. அவற்றில் இதுவரை 450 தரப்படுத்தப்பட்ட வரிவடிவங்கள் (ஐராவதம் மகாதேவன் - 419 வரிவடிவங்கள், அஸ்கோ பர்போலா - 386 வரிவடிவங்கள்) கண்டறியப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் விலங்குகள், விலங்குடன் மானுடம் இணைந்த உருவங்களைக் குறிக்கும் முத்திரைகள் ஆகும்.

காலிபங்கன்_189_A

காலிபங்கன்-0150

கொடுமணல்-0402

பி. வெல்ஸ் (B. Wells) தனது மேம்படுத்தப்பட்ட சிந்துவெளித் தரவுத்தளத்தில் (Interactive Corpus of Indus Texts (ICIT) database) 3898 சிந்துவெளி எழுத்துப் பொறிப்பு பெற்ற சான்றுகள் உள்ளிடப்பட்டுள்ளன. இவற்றில் காணப்படும் 4761 சொற்றொடர்களின் அடிப்படையில் 695 வரிவடிவங்களைப் பட்டியலிட்டுள்ளார். கிடைத்த 4761 சொற்றொடர்களில் 3723 சொற்றொடர்கள் மட்டுமே முழுமை பெற்றவை எனவும் அவற்றில் 13,556 வரிவடிவங்கள் காணப்பெறுகின்றன எனவும் குறிப்பிடுகிறார். அவற்றில் பெரும்பாலானவை 4 முதல் 5 வரிவடிவங்களைக் கொண்டுள்ளன எனவும் குறிப்பிடுகிறார்.

தோலாவிராவிலிருந்து கிடைத்த பெயர்ப்பலகையில் 10 வரிவடிவங்கள் கிடைத்துள்ளன; நீளமான சொற்றொடராக 26 வரிவடிவங்கள் காணப்படுகின்றன. சிந்துவெளி முத்திரை எதிர்ப்பதங்களில் (sealings) காணப்படும் சொற்றொடரின் இறுதியில் உள்ள வரிவடிவங்கள் இடமின்மையால் நெருக்கி எழுதப்பட்டுள்ளன. முதல் வரியில் தேவைப்படும் இடம் இல்லாத போது இரண்டாவது வரியில் வலது கோட்டில் (வலது முனையில்) தொடர்ந்து எழுதப்பட்டும், ஒருவரிவடிவத்தின் மீது மற்றொரு வரிவடிவம் எழுதப்பட்டும் இருக்கிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு சிந்துவெளி எழுத்துகள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டுள்ளன என்ற முடிவுக்கு வந்தனர். ஆனால், எழுத்து வடிவங்கள் என ஆவணப்படுத்தப்படாமல் குறியீடுகள் என ஆவணப்படுத்தப்பட்ட சிந்துவெளிக் குறியீடுகள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டுள்ளதா அல்லது இடமிருந்து வலமாக எழுதப்பட்டுள்ளதா என்பது குறித்துத் தெளிவாக மெய்ப்பிக்கப்படவில்லை.

சுனிதி குமார் சட்டர்ஜி, ஹீராஸ் பாதிரியார், உரி வாலந்திநோவிச், வால்டர் ஃபேர் சர்விஸ், ஐராவதம் மகாதேவன், கமில் சுவெலெபில், கிருஷ்ணமூர்த்தி மற்றும் அஸ்கோ பர்போலா (Suniti Kumar Chatterji, Father Heras, Yri Valentinovich Knorozov, Walter Fairservis, Iravatham Mahadevan, Kamil Zvelebil, Krishnamurti and Asko Parpola) ஆகியோர் சிந்துவெளி எழுத்து மொழி மூல-திராவிட மொழி என்று கருதினர். எஸ்.ஆர்.ராவ், எம்.வி.என்.கிருஷ்ணா ராவ் மற்றும் ஜான் இ.மிச்சினர் (S.R.Rao, M.V.N.Krishna Rao and John E.Mitchiner) ஆகிய அறிஞர்கள் சிந்துவெளியில் எழுதப்பட்ட மொழி இந்தோ-ஐரோப்பிய மொழி எனக் கருதினர். இந்த இரண்டு கருதுகோள்களுக்கு மாறாக, மைக்கேல் விட்செல், ஸ்டீவ் ஃபார்மர் மற்றும் ரிச்சர்ட் ஸ்ப்ரோட் (Michael Witzel, Steve Farmer and Richard Sproat) ஆகியோர் சிந்துவெளி வரிவடிவங்கள் எந்த மொழியையும் கொண்டிருக்கவில்லை மாறாக அவை வெறும் குறியீடுகளே என்று வலியுறுத்துகின்றனர். பகத்தா அன்சுமாலி முகோபாத்யாய் (Bahata Ansumali Mukhopadhyay) சிந்துவெளி எழுத்துகள் பொருளியல் சார்ந்த வடிவவியல் மற்றும் செயல்பாடு சார்ந்த வடிவவியல் எனவும் இவை எவ்வித ஒலியமைப்பியலையும் சார்ந்தவை அல்ல எனவும் கொள்கிறார்.

அடிப்படை குறியீடுகள்



Sign no. 1.0 | Sign no. 2.0 | Sign no. 3.0 | Sign no. 4.0 | Sign no. 5.0



Sign no. 6.0 | Sign no. 7.0 | Sign no. 8.0 | Sign no. 9.0 | Sign no. 10.0



Sign no. 11.0 | Sign no. 12.0 | Sign no. 13.0 | Sign no. 14.0 | Sign no. 15.0



Sign no. 16.0 | Sign no. 17.0 | Sign no. 18.0 | Sign no. 19.0 | Sign no. 20.0



Sign no. 21.0 | Sign no. 22.0 | Sign no. 23.0 | Sign no. 24.0 | Sign no. 25.0



Sign no. 26.0 | Sign no. 27.0 | Sign no. 28.0 | Sign no. 29.0 | Sign no. 30.0



Sign no. 31.0 | Sign no. 32.0 | Sign no. 33.0 | Sign no. 34.0 | Sign no. 35.0



Sign no. 36.0 | Sign no. 37.0 | Sign no. 38.0 | Sign no. 39.0 | Sign no. 40.0



Sign no. 41.0 | Sign no. 42.0

அடிப்படை குறியீடுகள் மற்றும் துணைக் குறியீடுகளின் நிகழ்வுகளின் எண்ணிக்கை

S. NO	BASE SIGN	BASE SIGN AND ITS VARIANTS	BASE SIGN AS COMPOSITES	TOTAL NUMBER OF VARIANTS	TOTAL NUMBER OF COMPOSITES	TOTAL
1	1.0	1.1 – 1.39	1.1C-1.124C	39	124	164
2	2.0	2.1 – 2.37	2.1C- 2.179C	37	179	217
3	3.0	3.1 – 3.27	3.1C – 3.105C	27	105	133
4	4.0	4.1-4.3	4.1C-4.19C	3	19	23
5	5.0	5.1-5.16	5.1C-5.35C	16	35	52
6	6.0	6.1-6.9	6.1C-6.40C	9	40	50
7	7.0	7.1-7.4	7.1C-7.32C	4	32	37
8	8.0	8.1-8.5	8.1C-8.7C	5	7	13
9	9.0	9.1-9.6	9.1C-9.42C	6	42	49
10	10.0	10.1-10.4	10.1C-10.5C	4	5	10
11	11.0	11.1-11.12	11.1C-11.59C	12	59	72
12	12.0	12.1-12.3	12.1C-12.3C	3	3	7
13	13.0	13.1-13.35	13.1C-13.66C	35	66	102
14	14.0	14.1-14.15	14.1C-14.16C	15	16	32
15	15.0	15.1-15.9	15.1C-15.83C	9	83	93
16	16.0	16.1-16.7	16.1C-16.58C	8	58	67
17	17.0	17.1-17.16	17.1C-17.41C	16	41	58
18	18.0	18.1-18.10	18.1C-18.5C	10	5	16
19	19.0	19.1-19.6	19.1C-19.28C	6	28	35
20	20.0	20.1-20.6	0	6	0	7
21	21.0	21.1-21.11	21.1C-21.38C	11	38	50
22	22.0	22.1-22.16	22.1C-22.35C	16	35	52
23	23.0	23.1-23.4	23.1C-23.38C	4	38	43
24	24.0	24.1-2.9	24.1C-24.20C	9	20	30
25	25.0	25.1-25.8	25.1C-25.21C	8	21	30
26	26.0	26.1-26.5	26.1C-26.10C	5	10	16
27	27.0	27.1-27.6	27.1C-27.2C	6	2	9
28	28.0	28.1-28.12	28.1C-28.26C	12	26	39
29	29.0	29.1-29.24	29.1C-29.22C	24	22	47
30	30.0	30.1-30.19	30.1C-30.70C	19	70	90
31	31.0	31.1-31.14	31.1C-31.15C	14	15	30
32	32.0	32.1-32.10	32.1C-32.20C	10	20	31
33	33.0	33.1-33.17	33.1C-33.15C	17	15	33
34	34.0	34.1-34.6	34.1C-34.59C	6	59	66
35	35.0	35.1-35.18	35.1C-35.18C	18	18	37
36	36.0	36.1-36.23	36.1C-36.51C	23	51	75
37	37.0	37.1-37.27	37.1C-37.40C	27	40	68
38	38.0	38.1-38.15	38.1C-38.21C	15	21	37
39	39.0	39.1-39.18	39.1C-39.22C	18	22	41
40	40.0	40.1	40.1C-40.3C	1	3	5
41	41.0	41.1-41.7	41.1C-41.20C	7	20	28
42	42.0	42.1-42.4	42.1C-42.8C	4	8	13
			Total	544	1521	2107

> “42 அடிப்படைக் குறியீடுகள் அல்லது அவற்றை ஒத்தக் குறியீடுகளில் ஏறக்குறைய 60% குறியீடுகள் சிந்துவெளி எழுத்துகளின் இணையாகக் காணப்படுகின்றன. மிக முக்கியமாகத் தென்னிந்தியாவில் கிடைக்கும் 90%க்கும் அதிகமான குறியீடுகள் சிந்துவெளிப் பண்பாட்டில் காணப்படும் குறியீடுகளுடன் ஒத்துப்போகின்றன”

சிந்துவெளி எழுத்துகள் மற்றும் குறியீடுகள்

தென்னிந்தியாவில் உள்ள மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்ட அடையாளம் காணக்கூடிய அனைத்துக் கீறல்களும், சிந்துவெளி மட்பாண்டங்களில் காணப்படும் சில கீறல்களும் ‘குறியீடுகள்’ என்றே அழைக்கப்படுகின்றன. சிந்துவெளி முத்திரைகளிலும், உலோகப் பொருட்களிலும் காணப்படும் வரிவடிவங்கள் சிந்துவெளி எழுத்துகள் எனவும், சிந்துவெளி மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்டவை குறியீடுகள் எனவும் பொதுவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. முத்திரைகளில் கீறப்பட்டவை எழுத்துகள் எனவும், மட்பாண்டங்களில் கீறப்பட்டவை குறியீடுகள் எனவும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இரு எழுத்துகளும் சிந்துவெளி மக்களால் எழுதப்பட்டிருக்கும் பொழுது ஒன்றை எழுத்து எனவும், மற்றொன்றைக் குறியீடு எனவும் எடுத்துக்கொள்ளவேண்டிய தேவையில்லை. இருப்பினும், குறியீடுகள் மற்றும் சிந்துவெளி எழுத்துகளின் விரிவான ஒப்பீட்டு ஆய்வின்மூலம் இரண்டும் படித்தறியப்படாத வரிவடிவங்கள் என்றே எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையின் ‘தமிழ்நாட்டுக் குறியீடுகள் மற்றும் தமிழி (Tamiḻi) (தமிழ்-பிராமி) எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளை ஆவணப்படுத்தல் மற்றும் மின்பதிப்பாக்கம்’ என்ற ஆய்வுத்திட்டம் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள 140 தொல்லியல் தளங்களிலிருந்து இதுவரை கிடைத்த 15,184 குறியீடுகள் கொண்ட பானை ஓடுகளில் 14,165 பானை ஓடுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இதில் கிட்டத்தட்ட 2107 குறியீடுகள் வடிவமைப்பில் ஒழுங்குபடுத்தப்பட்டு அவற்றில் 42 குறியீடுகள் அடிப்படைக் குறியீடுகளாகவும், 544 குறியீடுகள் அவற்றின் வேறுபாடுகளாகவும், 1521 குறியீடுகள் இணைக்குறியீடுகளாகவும் உருவவியல்/வடிவவியல் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அடிப்படைக் குறியீடுகளின் மேல் இடப்படும் சிறு கோடுகள் அடிப்படைக் குறியீடுகளின் வேறுபாடுகளாகவும், ஒன்றுக்கு மேற்பட்ட அடிப்படைக் குறியீடுகளைக் கொண்டிருக்கும் தொடர்கள் இணைக்குறியீடுகளாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டன.

தமிழ்நாட்டில் காணப்படும் பல குறியீடுகள் சிந்துவெளி எழுத்துகளின் இணையாக விளங்குகின்றன. இதேபோல், சில குறியீடுகள் ஒத்தக் குறியீடுகளாக விளங்குகின்றன. இவை அடிப்படைக் குறியீடுகளிலிருந்து உருவாகியிருக்கலாம். கிடைக்கப்பெற்றுள்ள 42 அடிப்படைக் குறியீடுகள்

Kalibangan-292A

Kodumanal_TNSDA-G-0580

Rojdi-325A

Mohenjadaro_0148_A

Kodumanal_TNSDA-G-0780

Mohenjadaro_0148_Flipped

Harappa-1482A

Karur-G-0150

Kalibangan-460A

Kalibangan-180A

Keedali_ASI-G-0023

Rojdi-129A

Mohenjodaro_0052_A

Kilnamandi-G-0011

Mohenjodaro_0052_a

Harappa_0071_A

Karur_G_0143

Harappa_0071_a

Mohenjodaro_0264_A

Keeladi ASI_G_0020

Mohenjodaro_0264_a


Harappa_0009_A

Kodumanal TU-PU_G_0346


Harappa_0009_a

Harappa_0093_A

Kodumanal_TU-PU-G_0299


Harappa_0093_a


Harappa_0006_A

Kodumanal_TNSDA-G-0523

Harappa_0006_a

Mohenjodaro_0272_A

Kodumanal TNSDA_G_0385

Mohenjodaro_0472_a

Mohenjodaro_0321_A

Thulukarpatti_G_3985

Mohenjodaro_0321_a

Rojdi-347 A


Teriruveli_G_0072

Harappa-1487 A

Harappa_0174_A

Thulukarpatti_G_1092

Harappa_0215_A

Mohenjodaro_0615_A

Thulukarpatti_G_0576

Harappa-1488 A

Mohenjadaro_0751_A

Vallanadu Agaram_G_0298

Mohenjadaro_0751_a

அல்லது அவற்றை ஒத்தக் குறியீடுகளில் ஏறக்குறைய 60% குறியீடுகள் சிந்துவெளி எழுத்துகளின் இணையாகக் காணப்படுகின்றன. மிக முக்கியமாகத் தென்னிந்தியாவில் கிடைக்கும் 90%க்கும் அதிகமான குறியீடுகள் சிந்துவெளிப் பண்பாட்டில் காணப்படும் குறியீடுகளுடன் ஒத்துப்போகின்றன அல்லது இணையாக விளங்குகின்றன. எனவே, தனியாகவும், கூட்டாகவும், இணையாகவும் கிடைக்கும் ஒரேவகைக் குறியீடுகளும், ஒத்த வடிவத்துடன் கூடிய குறியீடுகளும் இவை தற்செயலாக நிகழ்ந்தவையல்ல என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன. பொதுவாக, சிந்துவெளி எழுத்துகள் அல்லது குறியீடுகள் எவ்விதத் தடயங்களும் இல்லாமல் மறைந்திருக்காது என்ற அடிப்படையில் இவை வெவ்வேறு வடிவங்களாக மாறியிருக்கும் அல்லது பரிணாம வளர்ச்சியடைந்திருக்கும் என்று நம்பப்படுகிறது. எனவே, தற்பொழுது மேற்கொள்ளப்பட்ட ஒப்பீட்டாய்வு என்பது மொழியியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பீட்டாய்வு என்பதைக் காட்டிலும் உருவவியல்/வடிவவியல் ஒப்பீட்டாய்வு என்று கூறுவதே சாலச்சிறந்ததாகும்.

சிந்துவெளி முத்திரைகள் மற்றும் தொல்பொருட்கள் மெசபடோமிய நாகரிகத்தின் பண்பாட்டு மண்டலங்களில் கிடைத்துள்ளன. இந்தியாவில் உள்ள வளமிக்க பல்வேறு மண்டலங்கள் சிந்துவெளி மக்களின் அன்றாட தேவைகளான உணவுப் பொருட்கள், மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திப் பொருட்களை வழங்கி அவர்களின் தேவைகளை நிறைவு செய்துள்ளன. ஆனால், இந்த பகிர்வு மண்டலங்களிலிருந்து சிந்துவெளிப் பண்பாட்டைச் சார்ந்த பொருள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. சிந்துவெளி வணிகர்கள் மெசபடோமியர்களுடன் நேரடி வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்திருக்கலாம்; மேலும் வாணிப சமநிலை சிந்துவெளி வணிகர்களுக்கு ஆதரவாக இருந்திருக்க வேண்டும். சிந்துவெளித் தொல்லியல் தளங்களில் மெசபடோமிய நாகரிகத்தைச் சார்ந்த தொல்பொருட்கள் கிடைக்காதது, சிந்துவெளி வணிகர்களால் வாணிபம் கையாளப்பட்டிருக்கலாம் என்றும், வாணிப சமநிலை சிந்துவெளி வணிகர்களுக்குச் சாதகமாக இருந்திருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கிறது. வணிகத்தால் பெற்ற பயன் மெசபடோமியா பகுதிகளில் சிந்துவெளி மக்கள் குடியேற்றங்களுக்கு வழிவகுத்தது. அத்தகைய வணிகச்சூழல் இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து சிந்துவெளி மக்களுக்கு வழங்கிய வணிகப் பொருட்களில் காணப்படாததால் சிந்துவெளிப் பண்பாட்டைச் சார்ந்த தொல்பொருட்களை வழங்கிய பகிர்வு மண்டலங்களில் சிந்துவெளி மக்களின் அல்லது வணிகர்களின் குடியேற்றங்கள் இல்லாது போயின எனக் கருதலாம். இருப்பினும், தென்னிந்தியாவில் ஒரே வகையான குறியீடுகள் கிடைப்பது சிந்துவெளிப் பண்பாட்டிற்கும், தென்னிந்தியாவிற்கும் இடையே நிலவிய ஒரு வகையான பண்பாட்டுத் தொடர்பைக் குறிக்கிறது எனலாம். இக்கருதுகோளை வலுப்படுத்த கூடுதல் சான்றுகள் மற்றும் உறுதியான தரவுகள் தேவைப்படுகின்றன. அண்மைக் காலங்களில் பெறப்பட்ட அறிவியல் காலக்கணக்கீடுகள் சிந்துவெளி செப்புக் காலத்தில் இருந்த பொழுது, தென்னிந்தியா இரும்புக் காலத்தில் இருந்தது என்பதை நமக்கு உணர்த்துகின்றன. அந்த வகையில் தென்னிந்தியாவின் இரும்புக் காலமும், சிந்துவெளியின் செப்புக் காலமும் சமகாலத்தவை ஆகும். இரண்டும் சமகாலம் என்றால், சிந்துவெளிக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையே நேரடியாகவோ அல்லது இடைநிலை மண்டலங்கள் வழியாகவோ பண்பாட்டுப் பரிமாற்றங்கள் இருந்திருக்கக்கூடும். ஒரே வகையான குறியீடுகள் கிடைப்பதைக் கொண்டு இதை உணரலாம். சூது பவளம் (கார்னீலியன்) மற்றும் அகேட் மணிகள் செப்பு மற்றும் உயர்-தகர வெண்கலப் பொருட்கள் தென்னிந்தியாவில் கிடைப்பது குறிப்பாக இரும்புக்காலக் கல்லறைகளில் இருந்து கிடைப்பதால் இவை வடக்கிலிருந்தோ அல்லது வேறு இடங்களிலிருந்தோ தெற்கு நோக்கி வந்திருக்க வேண்டும் என்பதை நமக்கு உணர்த்துகின்றன. அரிய கல்மணிகள் மற்றும் செப்பு ஆகியவற்றைத் தவிர, இன்னும் பிற தொல்லியல் பொருட்கள் இத்தொடர்பை உறுதிசெய்ய தேவைப்படுகின்றன. அவ்வகையில் குறியீடுகள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங்கள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. எதிர்காலக் களஆய்வுகள், அகழாய்வுகள், அறிவியல் சார்ந்த ஆய்வுகள் மற்றும் வரலாற்று மொழியியல் அடிப்படையிலான பகுப்பாய்வுகள் ஆகியவை உள்ளார்ந்த சிந்தனையைத் தூண்டி பண்பாட்டு மற்றும் மொழியியல் சிக்கல்களுக்கு உன்னத பங்களிப்பை வழங்கக்கூடும்.

சிந்துவெளி முத்திரை